DEPOSITION OF WITNESS.

IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT COURT, SIVAGANGAI

S.C.No. 9/2017

PROSECUTION WITNESS No - PW- 20

| | | | |
|---|---|---|---|
| Name : | ரெங்கசாமி | Caste: | |
| Father Name | செல்லன் | Calling: | |
| Village: | | Religion: | |
| Taluk: | | Age: | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 10th day of July 2025.

1 முதல் 3 எதிரிகள் நீதிமன்றத்தில் நேரில் ஆஜர்

**முதல் விசாரணை :**

1) எனக்கு சொந்த ஊர் புதுக்கோட்டை மாவட்டம், நமணசமுத்திரம் அருகில் உள்ள தேக்காட்டூர் என்பதாகும். நான் தேக்காட்டூர் கிராம நிர்வாக அலுவலகத்தில் கிராம உதவியாளராக பணியாற்றி கடந்த 2017ம் ஆண்டு பணி ஓய்வு பெற்று சொந்த ஊரில் குடியிருந்து வருகிறேன். கடந்த 2015ம் ஆண்டில் தேக்காட்டூர் குரூப் கிராம உதவியாளராக பணியிலிருந்த போது கடந்த 23.05.2015ம் தேதி சிவகங்கை மாவட்ட காரைக்குடி பகுதி ரயில்வே காவல்துறையினர் என்னை வரச் சொன்னதன் பேரில் நமணசமுத்திரத்தில் இந்த வழக்கு தொடர்பாக இறந்த நபரின் வீட்டிற்கு வரச்சொல்லி வீட்டு பகுதியை ஒரு தாளில் படமாக வரைந்து கொண்டு பார்த்ததற்கு ஒரு மனு போன்ற மகஜர் எழுதி என்னிடம் கையொப்பம் வாங்கினார்கள். அதில் நானும் இளங்கோ என்றவரும் சாட்சியாக கையொப்பம் இட்டோம். இங்கு என்னிடம் காட்டப்படும் பர்வைமகஜரில் உள்ள 2-வது சாட்சி கையெழுத்து என்னுடையது தான். இந்த பார்வை மகஜர் அ.சா.17 திரு.இளங்கோவன் என்பவர் மூலம் அ.சா.ஆ.7 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. ஆனால் அ.சா.ஆ7 ஆக ஏற்கனவே அத்தாட்சி குறியீடு செய்யப்பட்ட நிலையில் தவறுதலாக மேற்கண்ட பார்வைமகஜரும் அ.சா.ஆ.7 ஆகவே குறியீடு செய்யப்பட்டுள்ளதால் மேற்படி பார்வைமகஜர் தற்போது **அ.சா.ஆ.8** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அதன் பின் கடந்த 26.02.2015-ம் தேதி புதுக்கோட்டை காரைக்குடி இடையில் உள்ள நமணசமுத்திரம் பகுதியில் உள்ள வழக்கு சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் ரயில்வே தண்டவாளப் பகுதியில் அதே

KANNAYEERAM ARIVOLI
Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2025.07.10 17:38:41 +0530

காவலர்கள் அதே போல் ஒரு பேப்பரில் மகஜர் தயாரித்து என்னிடம் கையெழுத்து வாங்கினார்கள். இங்கு என்னிடம் காட்டப்படும் பர்வைமகஜரில் உள்ள 2-வது சாட்சி கையெழுத்து என்னுடையது தான். மேற்படி பார்வைமகஜர் **அ.சா.ஆ.9** ஆக குறியீடு செய்யப்படுகிறது. இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>1வது, 2வது எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:</u>**

எனது வீட்டிற்கும் ரயில்வே தண்டவாளத்திற்கும் இடையே எத்தனை கிமீ தூரம் இருக்கும் என்றால் சுமார் 4கிமீ தூரம் இருக்கும். விபத்து நடந்த இடத்திற்கு நான் எத்தனை மணிக்கு சென்றேன் என்றால் காலை 10.00 மணிக்கு சென்றேன். நான் சம்பவ இடத்திற்கு சென்றபோது மக்கள் கூட்டம் இருந்ததா என்றால் இருந்தது சுமார் 50 முதல் 100 நபர்கள் வரை இருந்தார்கள். நான் சம்பவ இடத்திற்கு சென்றபோது சம்பவ இடத்தில் பொதுநபர்களிடம் காவல்துறையினர் விசாரித்துக்கொண்டிருந்தார்களா என்றால் விசாரித்தார்கள். என்னை எத்தனை முறை போலீசார் விசாரித்தார்கள் என்றால் சம்பவ இடத்தில் விசாரித்ததை தவிர மறுபடியும் விசாரிக்கவில்லை. நான் கையெழுத்து இட்டதாக சொல்லும் பார்வைமகஜரில் என்ன எழுதப்பட்டிருந்தது என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி பார்வைமகஜர் தட்டச்சு செய்யப்பட்டிருந்ததா கையால் எழுதப்பட்டிருந்ததா என்றால் கையால் எழுதப்பட்டிருந்தது. நான் சம்பவ இடத்திற்கு யார் தகவல் சொல்லி சென்றேன் என்றால் கிராமநிர்வாக அலுவலர் சொல்லி சென்றேன். நான் கையெழுத்து செய்த பார்வைமகஜரில் கிராமநிர்வாக அலுவலரும் கையெழுத்து செய்தாரா என்றால் கையெழுத்து செய்தார். நான் சொன்னது போல் போலீசார் சம்பவ இடத்திற்கு வந்து சம்பவ இடத்தில் வைத்து பார்வைமகஜர் தயாரித்து கையெழுத்து வாங்கவில்லை என்றும் காவல்நிலையத்தில் வைத்து வெள்ளை பேப்பரில் கையெழுத்து வாங்கினார் என்றும் கிராமஉதவியாளர் என்பதால் நேரில் கையெழுத்து வாங்கியதாக பதிவு செய்து அதற்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. காவல்துறையினர் கேட்டுக் கொண்டதால் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>3வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:</u>**

1வது மற்றும் 2வது எதிரிகள் தரப்பு குறுக்குவிசாரணையை ஏற்றுக் கொள்ளப்படுகிறது.

**<u>மறு விசாரணை</u>**. இல்லை

சாட்சி கூறியதை என் வாய்மொழிப்படி தட்டச்சரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியிடம் படித்துக் காட்டி, அவரால் சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்து பெறப்பட்டது.

KANNAYEERAM ARIVOLI

Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2025.07.10 17:38:47 +0530

முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
சிவகங்கை